Roll No. | | | | | | | |

**Series RKM** **Code No. 10**

- Please check that this question paper contains 5 printed pages.
- Code number given on the right hand side of the question paper should be written on the title page of the answer-book by the candidate.
- Please check that this question paper contains 6 questions.
- Please write down the serial number of the question before attempting it.

# TAMIL

# தமிழ்

*Time : 3 hours* — *Maximum Marks : 100*
*நேரம் : 3 மணி* — *மதிப்பெண்கள் : 100*

## பகுதி அ

**1.** (அ) எவையேனும் **ஐந்தினுக்குச்** சான்று தருக : 5

(i) உம்மைத் தொகை

(ii) காரியவாகு பெயர்

(iii) குறிப்புப் பெயரெச்சம்

(iv) வினையாலணையும் பெயர்

(v) இரட்டைக்கிளவி

(vi) இடவழுவமைதி

(vii) எதிர்மறைப் பொருளில் வரும் 'உம்' - இடைச்சொல்

(ஆ) எவையேனும் **ஐந்தினுக்கு** மட்டும் ஏற்ற சொற்களை இட்டுப் பூர்த்தி செய்க : 5

(i) படர்க்கை இடத்தில் வரும் வினைமுற்றுக்கு உதாரணம் ________ ஆகும்.

(ii) ஓர் உவமையின் பெயர் உவமேயப் பொருளுக்கு பெயராகி வருவது ________ .

(iii) திணை என்றால் ________ என்றுபொருள்.

(iv) பால் ________ வகைப்படும்.

(v) கீரிப்பிள்ளை என்பது ________ ஆகும்.

(vi) நான் என்பது வேற்றுமை உருபு ஏற்கும் போது ________ எனத் திரியும்.

(vii) ஒரு பொருளைக் குறிக்கப் பல சொற்கள் வருவது ________ ஆகும்.

(இ) எவையேனும் **ஐந்தினை** அடைப்புக் குறிகளில் கூறியபடி மாற்றி எழுதுக. 5

(i) பாடகன் பாட்டு (வேற்றுமை விரியாக்குக)

(ii) கண்டான் (முன்னிலை இடமாக மாற்றுக)

(iii) வேல் (உரிச்சொல்லைப் பொருத்துக)

(iv) நாடகம் பார்த்தாள் (செயப்பாட்டு வினையாக்குக)

(v) வணங்கினான் (வியங்கோள் வினைமுற்றாக்குக)

(vi) நண்பன் (அண்மை விளியாக்குக)

(vii) உண் (விகுதிபெற்ற ஏவலாக்குக)

**2.** (அ) ஏதேனும் **ஒருபகுதியில்** உள்ள குறிப்புகளைக் கொண்டு விரிவான கட்டுரை எழுதுக : 12

(i) முன்னுரை — செல்வத்தின் சிறப்பு — வரவு அறிந்து செலவு செய்தல் — சிக்கனப் படுத்திச் சேர்த்தலின் இன்றியமையாமை — சேமிப்பு வழிகள் — சிறுசேமிப்புத் திட்டங்கள் — பள்ளியில் சிறுவர்களுக்காகச் சஞ்சயிகாத்திட்டம் — அவற்றின் பயன் — வீட்டுக்கும் நாட்டுக்கும் உதவுதல் — முடிவுரை.

(ii) முன்னுரை — நூலறிவின் சிறப்பு — நூல் நிலையங்களின் இன்றியமையாமை — நூல்நிலைய அமைப்பு — பள்ளி நூல்நிலையம் — நடமாடும் நூல் நிலையம் — நிலையான நூல்நிலையம் — பயன்கள் — பயன்பெற்ற பெரியோர்கள் — நம் கடமை — முடிவுரை.

(iii) முன்னுரை — தமிழின் தலையாய நூல் — பெயர்க்காரணம் — திருக்குறள் அமைப்பு — பெருமை — உலகப் பொதுமறை — குறளால் தமிழும் தமிழரும் பெற்ற சிறப்பு — நம்கடமை — முடிவுரை.

(ஆ) ஜனாதிபதியிடம் விருது பெற்ற நண்பனுக்குப் பாராட்டுக் கடிதம் ஒன்று வரைக. 10

**அல்லது**

இரயில் நிலையத்தில் பெட்டி ஒன்றைப் பறி கொடுத்ததாக இரயில்வே நிலையக் கண்காணிப்பாளருக்குப் புகார் கடிதம் ஒன்று வரைக. இரண்டு கடிதங்களிலும் உனது முகவரி சங்கரன்/சங்கரி

7, நேமம் காலனி,
செந்தமிழ் நகர்,
சென்னை - 600001

(இ) பாரதியார் மேல் நிலைப்பள்ளி புதிய கட்டிடத் திறப்பு விழா - அறிக்கை எழுதுக. 8

**அல்லது**

கம்பன் கல்விக் கழகத்தில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளைப்பற்றி அறிக்கை எழுதுக.

3. பின்வரும் பத்தியைப் படித்து, கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடைதருக. 15

'நான்' - என்ற நிலை மாறி 'நாம்' என்ற நிலையைப் பெறும்போது ஒரு மனிதன் உயர்வு எய்துகிறான். மன்னவனாய்ப் பிறந்தாலும் தம்முன் கோடு போட்டுக் கொண்டு குறுகிய வட்டத்துள் சிறைபடாமல் அன்பெனும் கோட்டையைப் பிடித்தவர் புத்தர் பெருமான். எங்கு மனித நேயம் மலிந்துள்ள தோ அங்கு சமூகத் தொண்டு நிறைந்திருக்கும். எங்கு சமூகப்பணிகள் சிறப்பாக உளதோ அங்கே மாணவர்கள் பணிகள் முதன்மையாக இருக்கும். மாணவர்கள் மனம் வைத்தால் கல்லும் புல்லாகும்; புல்லும் நெல்லாகும்.

மாணவர்கள் விரைந்தோடும் நதி யொத்தவர்கள். சரியான பாதையைக் காட்டுதல் அவசியம். 'விளையும் பயிர் முளையிலே' என்னும் பழமொழியை எண்ணி இளமையிலேயே தொண்டு செய்யும் மன உணர்வை ஊட்ட வேண்டும். 'பிறப்பினால் எவர்க்கும் பேதமில்லை' - எனும் தன்மைக் கேற்ப சாதிமத பேதமற்ற மன உணர்வாய் மாற்றப்படுதல் வேண்டும். மாணவப் பருவத்தில் தங்கள் விருப்பத்திற்கு இணங்க பல்வேறு இயக்கங்களில் மாணவர்கள் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம். சாரணர் இயக்கம், செஞ்சிலுவைச் சங்கம், நாட்டு நலப் பணித்திட்டம், தேசிய இளைஞர்படை எனப் பல்வேறானவை மாணவர் களுக்காக அமைக்கப்பட்டவையே. இவற்றில் இணைந்து மாணவர்கள் சமூகத் தொண்டாற்றலாம்.

(i) மனிதன் எப்போது உயர்வு எய்துகிறான் ? 2

(ii) புத்தர் பெருமான் எத்தகையவர் ? 2

(iii) சமூகத் தொண்டு எங்கு நிறைந்திருக்கும் ? 2

(iv) மாணவப் பணிகள் எங்கு முதன்மை பெறும் ? 2

(v) மாணவர்களின் பண்புகள் யாவை ? 2

(vi) எவை மாற்றப் படுதல் வேண்டும் ? 1

(vii) மாணவர்களுக்காக அமைக்கப்பட்ட இயக்கங்கள் யாவை ? 3

(viii) இப்பகுதிக்கு ஏற்ற தலைப்பிடுக. 1

## பகுதி ஆ

4. (அ) ஏதேனும் **ஒரு பாடற்** பகுதியைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடைதருக :

கடக்கரும் அரக்கியர் காவல் சுற்றுளாள்
மடக்கொடி சீதையாம் மாத ரேகொலாம்
கடல்துணை நெடியதன் கண்ணின் நீர்ப்பெருத்
தடத்திடை இருந்ததோர் அன்னத் தன்மையாள்

(i) இக்கூற்று யாருடையது ? 1

(ii) 'அன்னம்' - யாருக்கு ஒப்பிடப் படுகிறது ? 1

(iii) 'கண்ணின்நீர்' எதற்கு ஒப்புமை ? 1

(iv) இப்பாடல் இடம்பெற்ற நூல் எது ? படலம் யாது ? 1

(v) ஆசிரியர் யார் ? 1

**(அல்லது)**

............ நீ நயந்தளித்தல்
தேற்றாய் பெரும பொய்யே என்றும்
தாய்சினம் தவிராது கடல் ஊர்பு எழுதரும்
ஞாயிறு அனையை எம்ம னோர்க்கே

(i) இப்பாடல் இடம் பெற்ற நூல் எது ? 1

(ii) ஆசிரியர் யார் ? 1

(iii) 'நீ' என்பது யாரைக குறிக்கும் ? 1

(iv) பகைவர்க்கு எத்தகையவன் ? 1

(v) அருள் புரிவதில் எத்தகையவன் ? 1

(ஆ) எவையேனும் **இரண்டு** வினாக்களுக்கு விடை தருக : 10

(i) இளங்கோவடிகள் கோவலன் கண்ணகியை எவ்வாறு அறிமுகப்படுத்துகிறார் ?

(ii) கொடியவர்களின் தீச்செயல்களையும், இயேகலின் அருளையும் எழுதுக.

(iii) கடல் பற்றிக் கவிஞர் வள்ளத்தோள் கூறுவன யாவை ?

(iv) 'சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கியாங்கு' - உவமையை விளக்கி, பொருளோடு பொருத்துக.

5. எவையேனும் **மூன்று** வினாக்களுக்கு விடை தருக : 15

(i) ஔவையாரே பாஸ்கலுக்கு முன்னோடி' - விளக்குக.

(ii) வீடே கோயில் தாயே கண்கண்ட தெய்வம்' - விளக்குக.

(iii) சீதக்காதியின் சிந்தையில் உதித்த செம்பணியை விளக்குக.

(iv) அம்பலத்தாடியார் அறிவிற் குறைப்பாடு உடையவர் என்பதற்கு இருசான்றுகள் தருக.

(v) கதர் திட்டத்தில் பெரியாருடைய பங்கினை எழுதுக.

6. ஏதேனும் **ஒருதலைப்பில்** துணைநூற் கட்டுரை எழுதுக. 10

(i) சொந்த வீடு

(ii) விடிவதற்குள்

(iii) மண்ணாசை